# கண்ணிவெடி கவனம்
## Mind the mines

**கண்ணிவெடிகள் குறித்து விழிப்புடன் இருங்கள்**

இலங்கை அரசாங்கம், யுனிசெப் (UNICEF), ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான உதவிப் பிரிவு (ECHO), ஸ்பெயின் அரசாங்கம் என்பன இன்டர்நியூஸ் நிறுவனத்துடன் இணைந்து நடத்தை ரீதியிலான மாற்றங்களை உண்டுபண்ணுவதன் மூலம் கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் என்பன தொடர்பான உங்களது விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டும் அத்தகைய பொருட்களிலிருந்து உண்டாகக்கூடிய அனர்த்தங்கள், காயங்கள் என்பனவற்றை குறைக்கும் பொருட்டும் 'கண்ணிவெடி கவனம்' (Mind the mines) என்ற தலைப்பில் கண்ணிவெடி அபாய கல்வியூட்டல் பிரச்சாரத்தை மேற்கொள்கிறது.

இலங்கையின் யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் சுமார் 1.5 மில்லியன் மிதிவெடிகளும் வெடிக்காத பொருட்களும் சுமார் 40 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரவிக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

'விழிப்போடு இருப்போம் , வருமுன் காப்போம்'

இந்தப் பரப்புரைத் திட்டம் உங்களிடம் இருந்தும் கருத்துக்களை எதிர்பார்க்கின்றது. கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வுத் திட்டம் எவ்வாறு உங்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியது என்பது குறித்து எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.

ஆசிரியர்
மீண்டும் வாழ்வோம்
த.பெ. இல:1039, கொழும்பு

## ஒரு போதும் இதனை செய்யாதீர்கள்



- கண்ணிவெடிகளை வீசவோ உதைக்கவோ அடிக்காவோ வேண்டாம். ஏனெனில் அவை வெடிக்கக் கூடியவை.
- கண்ணிவெடியை தொடவோ அதிலுள்ள வயர்களை அறுத்துவிடவோ வேண்டாம். அதிலிருந்து விலகியிருப்பதுடன் அது தொடர்பாக அதிகாரிகளிடம் தெரிவியுங்கள்.



- யுத்தப்பொருட்களின் மிகுதிகளை சேகரித்து வைக்க வேண்டாம்

## கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காத வெடிப்பொருட்களால் ஏற்படும் பாதிப்புக்கள்



- கண்ணிவெடிகள் மீது கால்வைத்தால் உங்கள் பாதங்களையோ கால்களையோ இழக்க நேரிடும் விழிப்பாக இருங்கள்.
- வெடி பொருட்கள் உங்களை மாத்திரம் பாதிக்காது . மாறாக உங்கள் குடும்பங்களையும் ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கும்/பாதுகாப்பாக இருங்கள் .
- நினைவில் வைத்திருங்கள் உங்களால் பல உயிர்களை காக்க முடியும்.

கண்ணிவெடியால் ஊனமுற்றவர்களை புறந்தள்ளாமல் அவர்களையும் உங்களுடன் விளையாட அழையுங்கள். அவர்களாலும் உங்களுடன் விளையாட முடியும்...



**சந்தேகத்திற்கிடமான பொருட்களைக் கண்டால் பின்வரும் நிறுவனம் ஒன்றிற்கு அறிவிப்போம்.**

| வவுனியா மாவட்டம் | மன்னார் மாவட்டம் |
|---|---|
| CTF: 024 222 1127 | CTF: 023 222 2501 |
| DMAO: 024 222 4214 | DMAO: 023 222 2235 |
| SLA: 011 306 1231 | SLA: 011 306 1231 |
| MAG: 024 3243451 | MAG: 023 224 3451 |
| Sarvatra: 024 492 0206 | Sarvatra: 024 492 0206 |
| Horizon: 024 224 8150 | Horizon: 023 223 3055 |
| FSD: 024 458 9059 / 024 222 0052 / 024 324 5737 | |
| DDG: 024 324 8214 | யாழ்ப்பாணம் மாவட்டம்<br>The HALO Trust:<br>021 320 5339 |
| UNICEF: 024 222 3485 | |

தங்கள் பகுதியிலுள்ள கிராம சேவை அலுவலர், பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கும் தெரியப்படுத்துங்கள்

## சந்தேகத்துக்கிடமான பொருளை கண்டால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு அறிவியுங்கள்

### பார்வையிடவோ தொடவோ முயற்சிக்காதீர்

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழுவினால் நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் தற்போது திருகோணமலை மாவட்டத்தில் இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் எந்தளவில் காணப்படுகின்றது என்பது தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்வதற்காக கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கையின் முகாமையாளர் பிரபாத் நாரம்பநாவை நேர்கண்டோம்.

**கேள்வி: உங்களுடைய நிறுவனத்தினால் கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகள் தற்போது எந்தெந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன?**

நாங்கள் தற்போது திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள செல்வநகர் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கையினை முன்னெடுத்து செல்கின்றோம்

**கேள்வி: கண்ணி வெடியகற்றும் நிபுணர் குழுவில் எத்தனைப் பேர் உள்ளடக்கப்படுகின்றனர்? இவர்களுக்கு எவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன?**

45 பேரைக் கொண்ட நிபுணர் குழுவினர் உள்ளனர். கண்ணி வெடியகற்றும் பணிகளில் ஈடுபடுவோருக்கு நாம் உரிய பயிற்சிகளை வழங்குகின்றோம்.பாதுகாப்பு பிரதானமான விடயமாக விளங்குவதால் நிபுணர் குழுவினருக்கு பல்வேறு ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அதேவேளை தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளின் உதவியுடன் முதலுதவி சிகிச்சைக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

**கேள்வி: வட மாகாணத்தில் எந்தப் பகுதிகளில் தற்போது கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன?**

வவுனியா மாவட்டத்தில் மக்கள் துரிதமாக மீள் குடியேற்றப்பட்டு வருவதால் அங்கு கண்ணி வெடியகற்றல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம். 3 நிபுணர் குழுவினரை அங்கு அனுப்பியுள்ளோம் .அவர்கள் இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பொம்மை மடு, இரணைமடு குளம், மரதமடு, ஓமந்தை ஆகிய பகுதிகளில் தற்போது கண்ணிவெடியகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கேள்வி: திருகோணமலையில் கண்ணி வெடியகற்றும் பணியில் ஈடுபடுவோர் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?**

தற்போது நிலவும் காலநிலையானது பாரிய பிரச்சினையாக கருதப்படுகின்றது. திருகோணமலையில் ஆங்காங்கே கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதால் அவற்றை கண்டு பிடிப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. அதேபோல் அங்கு அடர்ந்த காடுகள் காணப்படுவது நாம் எதிர்கொள்ளும் மற்றுமொரு சவால்.

**கேள்வி: மீள் குடியேற்றப்படும் மக்களுக்கு நீங்கள் வழங்கும் அறிவுரை என்ன?**

சந்தேகத்துக்கிடமான ஏதாவது ஒரு பொருளை கண்டால் அதனை பார்வையிடவோ தொடவோ முயற்சிக்காதீர்கள். பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு அறிவியுங்கள்.

# கண்ணிவெடி கவனம்
## Mind the mines

INTERNEWS
EUROPEAN COMMISSION Humanitarian Aid
unicef

**கண்ணிவெடிகள் குறித்து விழிப்புடன் இருங்கள்**

# 1999-2009 வரையிலான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் தொடர்பான மேற்பார்வை



படம்: அகற்றப்பட்ட கண்ணிவெடிகள்

*கண்ணிவெடிகளை தடைசெய்வதற்கான உடன்படிக்கை 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி கைச்சாத்திடப்பட்டு சர்வதேச சட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பத்து வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் 156 நாடுகள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றன. இரண்டு நாடுகள் இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டபோதிலும் அது உத்தியோகபூர்வமாக்கப்படவில்லை. இதேவேளை, 37 நாடுகள் இந்த பிரகடனத்தில் அங்கம் வகிக்காமல் இருக்கின்றன.*

### கடந்த 10 ஆண்டுகளாக கண்ணிவெடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன

- 2009, ஆகஸ்ட் வரையில் 3000 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன.
- 1999ஆம் ஆண்டில் பதினைந்து நாடுகள் மிதிவெடிகளை உபயோகிப்பதாக தெரிவிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை 2007ஆம் ஆண்டு இரண்டு நாடுகளாகக் குறைந்தது. அவையாவன: மியன்மார் மற்றும் ரஷியா.
- 1999-2009 காலப்பகுதியில் 13 நாடுகளை சேர்ந்த அரசோடு இயங்காத 59 ஆயுதக் குழுக்கள் கண்ணிவெடிகளை உபயோகிப்பதில்லை என உறுதி வழங்கியிருந்தன.
- கண்ணிவெடிகளை உற்பத்தி செய்த 38 நாடுகள் தமது உற்பத்தியை நிறுத்தியுள்ளன. தற்போது 13 நாடுகள் மட்டுமே இவற்றை உற்பத்தி செய்கின்றன.
- 86 நாடுகள் தாம் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த கண்ணிவெடிகளை அழித்துள்ளன. நான்கு நாடுகள் தற்போது அவர்களிடமுள்ள கண்ணிவெடிகளை அழித்து வருகின்றன.
- அண்ணளவாக 42 மில்லியன் கண்ணிவெடிகள், பயன்பாட்டிற்கு முன்னரே அழிக்கப்பட்டுவிட்டன,
- 90 நாடுகளில் 1100 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பிலும், 2100 சதுர கிலோமீற்றர் யுத்த பிரதேசத்திலும் 1999 இன் பின்னர் கண்ணிவெடியகற்றலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
- 2.2 மில்லியன் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளும், 250000 வாகனங்களுக்கெதிரான கண்ணிவெடிகளும் 17 மில்லியன் வெடிக்காத யுத்த மீதிகளும் அழிக்கப்பட்டுள்ளன.
- வருடம் தோறும் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 20000இலிருந்து 5200 ஆகக் குறைந்துள்ளது.
- 1992 இலிருந்து 2008 வரையான காலப்பகுதியில் கண்ணிவெடி அகற்றலுக்காக சர்வதேச நாடுகள் 4.27 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தன.
- 2009ஆம் ஆண்டு கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்ட நாடாக ருவாண்டா அறிவிக்கப்பட்டது.

## மீண்டும் வாழ்வோம் உங்களுக்கான தகவல் ஊடகம்

உங்கள் வாழ்நிலையை மேம்படுத்தக் கூடிய மனிதாபிமானப் பணிகள் தொடர்பான செய்திகளை ''மீண்டும் வாழ்வோம்'' வாராந்தத் தகவல் இதழ் உங்கள் நலன்பொருட்டு இலவசமாக வெளியிடுகிறது. 'மீண்டும் வாழ்வோம்'' வானொலி நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளிவரை இரவு 9.30 முதல் 10.00 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம்.வானொலியில் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 1.30 மணி முதல் 2.00 மணிவரையும் ஒலிபரப்பாகிறது.

- **''மீண்டும் வாழ்வோம்'' தகவல் இதழ் உங்கள் பிரதேசத்தில் கிடைப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா?**
- **எமது செய்தி ஊடகத்துக்குப் பங்களிக்க விரும்புகிறீர்களா?**
- **எவ்விதமான தகவல்கள் இடம்பெற வேண்டுமென விரும்புகிறீர்கள்?**
- **உங்களது அபிப்பிராயங்களை எமக்கு எழுதுங்கள்...**

**முகவரி:** மீண்டும் வாழ்வோம்
**த.பெ. இல:1039, கொழும்பு**




## கண்ணிவெடியால் ஒருவர் தாக்கப்பட்டால் என்ன செய்வது?

**கண்ணிவெடி தாக்குதலுக்குள்ளானவர் ஒருவருடன் பயணிக்கும் போது கையாளவேண்டியவை.**

- மிக விரைவாக வாகனமொன்றின் உதவியுடன் காயப்பட்டவரை அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்
- வைத்தியசாலைக்கு பயணிக்கும்போது காயப்பட்டவர் போதியளவு சுவாசிக்கின்றார் என்பதனையும், அவரது காயத்திற்கு ஏற்றவாறு கட்டுக்கள் போடப்பட்டிருப்பதையும் உறுதிசெய்துகொள்ளுங்கள்.
- காயமடைந்த உடற்பகுதியானது காயமடைந்தவருடைய மார்புப்பகுதியிலிருந்து (இதயம்) உயர்ந்து காணப்படுதல் வேண்டும். இது அவருடைய காயத்திலிருந்து வெளியேறும் இரத்தத்தின் அளவினை கட்டுப்படுத்த உதவும்.



- காயப்பட்டவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது காயத்திற்கு போடப்பட்ட கட்டினை சிறிது அழுத்திப் பிடிப்பதன் மூலம் காயத்திலிருந்து வெளியேறும் இரத்தப்போக்கின் அளவை சிறிது கட்டுப்படுத்த முடியும்.
- உடல் வெப்பத்தைப் பேணுதல்: காயமடைந்தவரின் நண்பரோ மருத்துவரோ அவரைத் தனது கரத்தால் அணைத்தபடி ஒரே போர்வைக்குள் இருத்தல். உடல் வெப்பத்தைப் பேணுவதற்கு இது மிகச்சிறந்த வழிமுறையாகும்



- பாதிக்கப்பட்டவர்களில் முள்ளந்தண்டு காயப்படாத, மூச்சிழுக்கச் சிரமப்படுபவர்களை அல்லது நினைவிழந்தவர்களை 'மீட்டல் நிலையில்' (அருகிலுள்ள படத்தைப் பார்க்கவும்) கிடத்த வேண்டும். இது காயமடைந்தவர்களைக் காப்பாற்றுவது தொடர்பில் கையாளப்படும் முறைகளில் இது மிகச் சிறந்தவொன்றாகும்.
- தலையில் காயம் பட்டிருக்குமானால்இ தலையையும் கழுத்தையும் ஒரு நபரே பிடித்தபடியிருக்க வேண்டும். போக்குவரத்தின் போதுஇ இருக்கும் நிலையை முழங்கால் சமன்செய்யக் கூடிய வகையில் காலின் மேற்பகுதி அசைந்து கொடுக்கப்பட வேண்டும்.

## கண்ணிவெடி விழிப்புணர்வு குறுக்கொழுத்துப் புதிர்



**மேலிருந்து கீழ்:**

1. பொதுவாக, கண்ணிவெடி அபாயம் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட இடங்கள் இவற்றால் வேலியிடப்பட்டிருக் கும்.

3. கண்ணிவெடிகள் மிக ஆபத்தாவனை ஆதலால்----------- தேவை

**இடமிருந்து வலம்:**

1. காயமடைந்த ஒருவருக்கு வழங்கப்படும் உடனடி மருத்துவ சிகிச்சை
2. எமது இந்தப் பிரச்சாரத்திட்டம்__________அபாயம் பற்றிய விழிப்புணர்வு உங்கள் மத்தியில் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.
3. கண்ணிவெடி உள்ள இடங்களில் சிவப்புநிறத்தில்---------என்று எழுதப்பட்டிருக்கும்.
4. கண்ணிவெடிகளால் உயிரிழப்போடு இதுவும் ஏற்படலாம்.